பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

இரா. செழியன்

மலர்: 20] சென்னை: புரட்டாசி 25 (11—10—72) புதன் | வெளியூர்: புரட்டாசி 26 (12—10—72) வியாழன் [இதழ்: 98

அரசுப் பேருந்துகளில் இலவச 'பாஸ்'

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கிடைக்கும்

திருச்சி, அக். 11—

தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அரசு பஸ்களில் இலவசமாகப் பயணம் செய்ய 'பாஸ்' தருவது என்று தமிழ்நாடு போக்குவரத்துத் துறை முடிவு செய்திருக்கிறது.

இத்தகவலை, போக்குவரத்துத்

(4-ம் பக்கம் பார்க்க)

சுயநலவாதிகள் கையில் இந்திரா காங்கிரசு

சோஷலிச நடவடிக்கையால் ஏற்பட்ட பலன் என்ன?

டாட்டா -- பிர்லாக்களின் இலாபவேட்டை குறைந்ததா?

விலைவாசி ஏற்றம் --- வேலையின்மைப் பிரச்சினைக்கு வழி என்ன? ---
சொந்தக் கட்சித் தலைமையையே சாடுகிறார் இந்திரா காங்கிரசுப் பிரமுகர்

காந்தி நகர், அக். 11—

"சோஷலிச வழிகள் மூலமும்--அமைதியான நடவடிக்கைகள் மூலமும் புதியதோர் இந்தியாவை இந்திரா காங்கிரசு உருவாக்கும் என்றுதான் எல்லோரும் நம்பினார்கள்.

"இந்திரா காங்கிரசின் நடவடிக்கையாகப் பாங்கிகள் என்னவோ நாட்டுடைமையாக்கப்பட்டுத்தான் இருக்கின்றன; மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டுத்தான் இருக்கின்றன; ஆனால் இவற்றால் விளைந்த பயனைப் பற்றிப் பார்க்கவேண்டாமா? 1972 ஆகியும்கூட இன்னும் இந்த நாட்டுடைமையான பாங்கிகளுக்குச் சரியான குழுக்கள் அமைக்கப்படவில்லை; இந்தப் பாங்கிகள் ஏழை விவசாயிகளுக்குத் தக்கபடி கடன் உதவி செய்யத் தவறிவிட்டன!

"ஏகபோகத்தை ஒடுக்கக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் அந்தக் குழு தன்னுடைய செயலில் வெற்றி பெறவில்லை! பிர்லாவின் சொத்துக்களும், டாட்டாவின் சொத்துக்களும் இந்தக் கால அளவில் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிக்கத்தான் செய்திருக்கின்றன!

"அரசியல் அமைப்புச் சட்டத்தின் 25 வது திருத்தத்தின் போது நமது அரசாங்கம், இழப்பீடு சம்பந்தமான கொள்கைகளை வகுக்க மறந்துவிட்டது.

"கொள்கை வகுக்க மறந்துவிட்ட காரணத்தால் சிறிய மனிதர்களின்--சாதாரண மக்களின் சொத்துக்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, அவற்றிற்காக அளிக்கப்பட வேண்டிய இழப்பீட்டிற்கு நீண்டகாலத் தவணையோடு கூடிய பத்திரங்கள் வழங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது; அதே சமயம், நாட்டுடைமையாக்கப்பட்ட பொதுக் காப்பீட்டு நிறுவனங்களுக்கு இந்த அரசாங்கம் ரொக்கமாக இழப்பீட்டுப் பணம் வழங்கியது."

இந்திரா காங்கிரசுத் தலைமைமீது இப்படிக் குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கண்டனக் குரல் எழுப்பியிருப்பவர் மாற்றுக் கட்சியைச் சார்ந்த எவரும் இலர் -- இந்திரா காங்கிரசுக் கட்சியின் முக்கிய புள்ளிகளில் ஒருவரான கிருஷ்ணகாந்த் என்பவர்தான்!

அதுவும் வேறு எங்கும் சந்துமுனைகளில் அல்ல -- இந்திரா காங்கிரசுச் செயற்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு அவர் காங்கிரசுத் தலைமையின் போக்கை அம்பலப்படுத்தியிருக்கிறார்; அவர் மேலும் பேசியதாவது:—

வன்முறைகளுக்கு தீர்வு என்ன?

நாட்டின் பல இடங்களிலும் வன்முறைகள் தலைதூக்கி வருகின்றன; மாணவர்களும்--இளைஞர்களும் அமைதியை இழந்து நிற்கின்றனர்; இந்நிலைமைகளுக்கு ஒரு பரிகாரம் காணவேண்டியது கட்சித் தலைமையின் உடனடியான பணியாகும்.

சுயநலவாதிகள் கையில் காங்கிரசு

விலைவாசி உயர்வைவிட எனக்குக் கவலை தருவது, 'இந்த விலை உயர்வுக்குக் காரணம் சுயநலவாதிகளிடம் காங்கிரசுக் கட்சி சிக்கிக் கொண்டிருக்கிறது என்று மக்கள் கூறுகிறார்களே' என்பதுதான்.

சர்க்கரை மிக அநியாய விலைக்கு விற்கப்படுகிறது.

குசராத் -- பீகார் போன்ற மாநிலங்களில், சர்க்கரை விலையேற்றத்துக்கு சர்க்கரை ஆலை அதிபர்களிடம் காங்கிரசு பணம் பெற்றுக் கொண்டிருப்பதே என்று மக்கள் நம்புகிறார்கள்.

தகுதியற்ற முதலமைச்சர்

மத்தியப் பிரதேச முதலமைச்சர் சேத்தி, அரசு உணவுத் தானிய வர்த்தகத்தை மேற்கொள்வதில் சிரமமிருப்பதாகக் கூறியிருக்கிறார்; இது எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது. கட்சியின் கொள்கைகளை செயல்படுத்த முடியாத ஒரு முதலமைச்சர் பதவியில் அமருவதற்கே அருகதை இல்லாதவராவார்!

ஒவ்வொரு ஆண்டும் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருக்கிறது; இது 1,50,000 முதல் இரண்டு இலட்சம் வரையில் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகிக்கொண்டு வருகிறது; இது மிகவும் பயங்கரமான நிலையாகும்.

பெரிய அளவில் செல்வத்தைக் குவித்து வைத்திருப்பவர்களிடமிருந்து அந்தச் செல்வம் அவ்வளவையும் கைப்பற்ற வேண்டும்; இதற்கு ஏற்றபடி அரசியல் அமைப்பு விதிமுறைகளைத் திருத்தவேண்டும்.

ஏழை மக்களைக் காங்கிரசுக்கட்சி ஏழைகளாக வைத்துப் பார்க்க விரும்பக்கூடாது; மாறாக, ஏழை மக்களின் ஏழ்மையைப் போக்க வகை காண வேண்டும்.

வாக்குறுதி என்ன ஆயிற்று?

தனியார் துறையைப்பற்றி இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது; இந்தத் தீர்மானம் ஒரு தெளிவில்லாத தீர்மானம்.

சர்க்கரைத் தொழிற்சாலைகள் நாட்டுடைமையாக்கப்படும் என்று 1969-ல் காங்கிரசுக் கட்சி மக்களுக்கு வாக்குறுதி அளித்தது; ஆனால் இதுவரையில் நாட்டுடைமையாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

"1975-ம் வாக்கில் இந்த நாட்டு மக்களின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள் கிடைக்கும்படி செய்யப்பட்டு விடும்" என்று முதலில் காங்கிரசு வாக்குறுதியளித்தது; அதன் பிறகு 1975 என்பதை 1980 என்று திருத்தியிருக்கிறார்கள்; இதன் மூலம் நாம் கொடுத்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்கவில்லையா?

இவைகள் அனைத்தின் மூலமும் ஒன்று--நாம் கொடுத்த வாக்குறுதியை மீறுகிறோம் அல்லது நம்முடைய குறிக்கோள் என்ன வென்று நமக்கே தெளிவாகப் புலப்படவில்லை என்றுதான் பொருள்படுகிறது."

தி. மு. க.

தலைமைச் செயற்குழு-- பொதுக்குழுக் கூட்டங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 1972 அக்டோபர் 12, 13 (வியாழன்–வெள்ளி) ஆகிய நாட்களிலும் –

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் அக்டோபர் 14, 15 (சனி -- ஞாயிறு) ஆகிய நாட்களிலும் –

சென்னை மயிலை எட்வர்டு எலியட்ஸ் சாலையிலுள்ள இராஜேசுவரி திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அதுபோது,

1. இராசமன்னார் குழு அறிக்கை பற்றிய கழகத் துணைக் குழு அறிக்கை
2. கழக வரவு – செலவுக் கணக்குகள்
3. கழக எதிர்கால ஆக்கப் பணிகள்

ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

'அறிவகம்' சென்னை-13
11—10—1972

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

குறிப்பு:—தலைமைச் செயற்குழுக் கூட்டம் அண்ணா சாலை சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் நடைபெறுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது; அந்த இடம் மாற்றப்பட்டு, தலைமைச் செயற்குழுக் கூட்டமும் பொதுக்குழு கூடும் இடத்திலேயே நடைபெறும்.

வங்க தேசத்தில் இனக் கொலை புரிந்த பாகிஸ்தான் படையினர்

ஆயிரம் பேர் குற்றக் கூண்டில் நிறுத்தப்படுவர்

டாக்கா, அக். 11—

வங்க தேசத்தில் இனக் கொலை புரிந்த பாகிஸ்தான் இராணுவத்தினர்மீது விரைவில் விசாரணை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரையில் சுமார் 1,000 பேர் மீது, விசாரணைக்கான ருசுக்கள் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வங்க தேசத்தின் பல மாவட்டங்களிலுமாகச் சுமார் 40 தனி விசாரணை மன்றங்கள் அமைக்கப்பட்டு விசாரணை நடைபெறும் என்று தெரியவருகிறது.

ரூ. 146 கோடி மதிப்புள்ள சீன ஆயுதங்கள்

பாகிஸ்தானுக்குக் கிடைத்தனவாம்

வாஷிங்டன், அக். 11—

1965-ல் இந்தியா -- பாகிஸ்தான் போர் நடைபெற்றது முதல் சென்ற ஆண்டு நடைபெற்ற போர் வரையில் பாகிஸ்தானுக்கு 20 கோடி டாலர் (ரூ 146 கோடி) பெறுமானமுள்ள சீன ஆயுதங்கள் பாகிஸ்தானுக்குக் கிடைத்திருக்கின்றன.

நிலவுடைமை பற்றிய பதிவேடு

20 இலட்சம் பட்டாதாரர்கட்கும் வழங்கப்படும்

திட்டத்தைப் பரமக்குடியில் முதலமைச்சர் துவக்கி வைத்தார்

பரமக்குடி, அக். 10—

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 74 இலட்சம் நிலம் பட்டாதாரர்களுக்கும் 'பட்டா பாஸ்' புத்தகம் தருவதற்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

நிலத்தைப் போலியாக வைத்துக் கொள்ளுதல் மற்றும் இது போன்ற இதுபோன்ற சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு இந்தப் பாஸ் புத்தக முறை மிகவும் பயன்படக்கூடியதாகும்.

பரமக்குடியில் நேற்று, பட்டா புத்தகம் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் துவக்கி வைத்தார்.

"இத்திட்டம், அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுவரும் சோஷலிசத் திட்டங்களில் ஒன்றாகும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறினார்.

இப்புத்தகத்தில், நிலம் சம்பந்தப்பட்ட பல தகவல்களுடன், மதிப்பு -- வரியளவு -- கடன் பெறத் தகுதி போன்ற பல தகவல்களும் அடங்கியிருக்கும்.

இந்நிகழ்ச்சிக்கு வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் தலைமைவகித்தார்.

"அரசு மேற்கொண்டிருக்கும் நிலச் சீர்திருத்தத் திட்டங்களில், பட்டாதாரர் பாஸ் புத்தகம் வழங்குவதும் ஒரு புரட்சித் திட்டமாகும்" என்றார் அவர்.

53,000 பேருக்கு நிலப் பட்டா

இப்பகுதியில் 53,000 நிலப் பட்டாக்களையும் விவசாயிகளுக்கு முதலமைச்சர் வழங்கினார்.

'மாவீரர்' காமராசர் வாய்வீச்சு

[★]

கழகத்தின் பரம்பரை பற்றிப் பேச அவருக்கு யோக்கியதை உண்டா?

[★]

'நெஞ்சுரம்' இல்லாதவர் யார் என்பதை தமிழக அரசியல் வரலாறு கூறும்

"அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் குறை கூறுவதில் பயனே கிடையாது; இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், விலைவாசி உயர்வைத் தடுக்க மாநில அரசு என்ன செய்திருக்கிறது என்று கேட்க மக்களுக்கு உரிமையுண்டு. அப்படி மத்திய அரசுதான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்று அவர்கள் உண்மையிலேயே கருதுவதானால், மத்திய அரசை எதிர்த்துப் போராட அவர்கள் (தி.மு.க. அரசு) தயங்கக்கூடாது.

"மத்திய அரசை எதிர்த்துப் போராடும் நெஞ்சுரம் தற்போதைய மாநில அரசுக்கு இருப்பதாக நான் கருதவில்லை; அவர்கள் பரம்பரையே அநீதியை எதிர்த்துப் போராடும் பரம்பரையல்ல -- ஆட்சியாளர்கட்கு மண்டியிடும் பரம்பரைதான்!

"மத்தியில் எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் தற்போதைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் அவர்களைத் தைரியத்துடன் எதிர்த்துப் போராடமாட்டார்கள்; மத்தியில் பதவியில் உள்ளவர்கட்குச் சலாம் போடத்தான் அவர்கட்குத் தெரியும்!

"இப்படிப்பட்டவர்கள், மாநில சுயாட்சியைப் பற்றிப் பேசுவதும், அதற்காகப் போராடப்போவதாகவும் பாசாங்கு செய்வதுதான் விந்தையாக இருக்கிறது."

இந்த அற்புதமான வாசகங்களை உதிர்த்திருப்பவர் -- சிண்டிகேட் பெருந்தலைவர் காமராசர்தான்!

'விலைவாசி உயர்வைத் தடுக்குமாறு மத்திய அரசிடம் தமிழக அரசு போராட வேண்டும்' என்று பேச ஆரம்பித்த அவர், தி.மு. கழகப் பரம்பரையைப் பற்றியெல்லாம் ஆராயத் தலைப்பட்டு -- இறுதியில் மாநில சுயாட்சி வரையில் வந்து நின்றிருக்கிறார்! அவர் நிலைகண்டு இரங்குவதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை!

இந்திரா காங்கிரஸ் மீது தமக்குள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள எந்த ஆயுதம் கிடைத்தாலும் பயன்படுத்திக்கொள்ளக் காமராசர் துடிக்கிறார் என்பதே இந்தப் பேச்சிலிருந்து தெரியவரும் உண்மையாகும்!

விலைவாசி உயர்வு பற்றியோ, மக்கள் படும் அவதி பற்றியோ அவருக்குக் கவலையில்லை; எப்படியாவது இந்திரா அரசை எதிர்த்துப் போராட்டம் நடைபெற வேண்டும் -- அதைச் செய்யத் தம் சொந்தக் கட்சிக்குப் பலமில்லை -- தி.மு. கழகத்தையாவது உசுப்பி விட்டுப் பார்க்கலாம் என்பது அவரது ஆசை!

விலைவாசி உயர்வுக்குக் காரணம் யார்? மத்திய அரசா -- மாநில அரசா என்பதெல்லாம் அவருக்குப் புரியும்! இந்த மாநிலத்தின் முதல்வராக எட்டாண்டுக்கு மேலாக இருந்தவராயிற்றே -- அவருக்கா புரியாது!

விலைவாசி உயர்வுக்கு மாநில அரசுதான் பொறுப்பு என்று அவர் கருதுவாரானால், விலைவாசியைக் குறைக்க மாநில அரசு செய்துள்ள -- செய்துவரும் முயற்சிகளைப் பற்றி அவர் என்ன கருதுகிறார்? ஒன்றுமே செய்யவில்லை என்கிறாரா?

மாநில அரசு தனக்கிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு என்னென்ன செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்தும்கூட, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளது என்றால், இதற்கு யார் காரணம்?

விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம் என்று தி.மு. கழக அரசு கருதுவது இருக்கட்டும்; ஆண்டு அனுபவப்பட்ட அவர் என்ன கருதுகிறார் -- யார் காரணம் என்பது முதலில் நமக்குத் தெரியவேண்டும்.

காமராசர் ஆண்ட காலத்தில்தானே தி.மு. கழகம் விலைவாசிப் போராட்டம் நடத்தியது? அப்போது இந்தக் காமராசர் என்ன சொன்னார்? இருபதாயிரத்துக்கு மேற்பட்ட கழகத் தலைவர்களையும் -- தொண்டர்களையும் சிறையிலே அடைத்துவைத்துவிட்டு அவர் என்ன பேசினார்? -- 'கலெக்டர் ஆபீசிலே மறியல் பண்ணிவிட்டால் விலைவாசி குறைந்துவிடுமா' என்று கேலியும் கிண்டலும் செய்யவில்லையா?

அவருடைய அமைச்சரவையில் இருந்த வெங்கட்ராமனே, 'வளர்ச்சியடையும் நாடுகளில் விலைவாசி உயருவது இயல்புதான்; விலைவாசி உயர்வு நமது பொருளாதார வளர்ச்சியைத்தான் காட்டுகிறது' என்று வியாக்கியானம் செய்யவில்லையா?

"விலைவாசி உயர்வைத் தடுக்க மத்திய அரசாங்கம் என்ன செய்தது. என்று கேட்க மக்களுக்கு உரிமையுண்டு" என்று இன்று கூறும் காமராசர், அன்று அந்த உரிமையை நசுக்கத்தானே அடக்குமுறைகளை ஏவி விட்டார்?

உரிமைக் குரல் எழுப்பியவர்கட்கு அன்று அவர் அளித்த பதில் என்ன? 'விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசைக் குறை கூறிப் பயனில்லை; மாநில அரசேதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று இன்று உபதேசம் செய்யும் இந்தப் பொருளாதார 'மேதை', அப்போது விலைவாசியைக் குறைக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மத்திய அரசை எதிர்க்கத் தி.மு.க. அரசுக்குத் துணிவில்லை என்று கூறும் இந்த மாவீரர், தாம், ஆண்டபோது, மத்திய அரசை எதிர்த்து எத்தனைமுறை போராடியிருக்கிறார்? எந்த அநீதியை எதிர்த்துக் குரல் எழுப்பியிருக்கிறார்?

தேவிகுளம், பீர்மேட்டைப் பறிகொடுத்துவிட்டு -- 'சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்ற பெயரில்லை' என்று டில்லி கூறியதைக் கேட்டுக்கொண்டு வந்துவிட்டு -- இங்கே போராட்டம் நடத்திய எதிர்க் கட்சியினரைப் பார்த்து; 'குளமாவது -- மேடாவது' என்று கேலி பேசியவர்தானே இவர்? தமிழ் மக்கள் இவற்றையெல்லாம் மறந்தாவிட்டார்கள்?

'உறவுக்குக் கைகொடுப்போம் -- உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி முன்னிலையிலேயே அறுதியிட்டு முழங்கியவர் நமது தமிழக முதல்வர் கலைஞர் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும்.

இந்தியை எதிர்த்து அன்றைய துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் முன்னிலையிலேயே அறைகூவல் விடுத்துவிட்டுத் தமிழகம் திரும்பியவர் நமது தமிழகச் சட்ட அமைச்சர் மாதவன் என்பதை வரலாறு கூறும்!

காமராசர் காலத்தில் தமிழ்மக்களுக்கும் பெற்றுத்தர முடியாத 'தமிழ்நாடு' பெயரைப் பெற்றுத் தந்தவர் நமது தமிழக முதல்வர் அண்ணா! டால்மியாபுரம் கல்லக்குடியாக மாற்றப்பட்டது கலைஞர் தலைமையில் உள்ள கழக ஆட்சியில்தான்!

ஆகாஷ்வாணி'--வானொலியாக மாறியதும் இதே கழக ஆட்சியில்தான்!

இவைபோன்று இன்னும் எத்தனையோ காரியங்களைக் கழக அரசு தானே துணிந்து செய்து வருகிறது!

மத்திய அரசின் மும்மொழித் திட்டத்தைத் தூக்கி எறிந்துவிட்டு இருமொழித் திட்டத்தைத் தமிழகப் பள்ளிகளில் செயல்படுத்தியவர் மறைந்த மாமேதை அண்ணா அல்லவா?

'இந்திக் கட்டளைச் சொற்களை ஏற்கமாட்டோம்' என்பதற்காக தேசிய மாணவர் படையையே தமிழகத்தில் ரத்து செய்தவர் பேரறிஞர் அண்ணா அல்லவா?

இந்தக் காரியங்களெல்லாம் மத்திய அரசை எதிர்த்துத் துணிவுடன் செய்யப்பட்டவையல்லவா?

டில்லியில் நடக்கும் முதல்வர்கள் மாநாடு பற்றி முன்கூட்டி முதலமைச்சர்களைக் கலந்துகொண்டு தேதி நிர்ணயிக்கத் தவறிய காரணத்தால், அந்த மாநாட்டையே புறக்கணிக்கத் துணிந்தவர் நமது முதல்வர் கலைஞர் அல்லவா? பிறகு தலைமையமைச்சர் சமாதானம் கூறி வேண்டுகோள் விடுத்த பின்னர்தானே முதல்வர் டில்லிக்குப் புறப்பட்டார்?

இப்படி ஏதேனும் ஒரு காரியத்தையாவது காமராசர் தமது ஆட்சிக் காலத்தில் செய்யத் துணிந்திருப்பாரா?

டில்லிக்குக் காவடி எடுத்ததும் -- சலாம் போட்டதும் -- குட்டும்போதெல்லாம் குனிந்து கொடுத்ததும் -- காமராசரும் அவரது பரம்பரையும்தானே தவிர அறிஞர் அண்ணா பரம்பரையல்ல!

கழகத்தின் பரம்பரை பற்றிப் பேசக் காமராசருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

"மாநில சுயாட்சி பற்றி தி.மு.க. பேசுவதும் -- அதற்காகப் போராடப்போவதாகக் கூறுவதும் பாசாங்கு செய்வதும் விந்தையாக இருக்கிறது" என்று காமராசர் குறைபட்டுக் கொள்வதைப் பார்த்தால், அவரே 'மாநில சுயாட்சி வேண்டும்' என்று கேட்டும் போராடப் புறப்பட்டுவிடுவார்போலிருக்கிறது!

"தி.மு. கழகத்தவருக்குத்தான் போராடும் நெஞ்சுரம் இல்லையே-- நானாவது மாநில சுயாட்சிப் போராட்டத்தைத் துவக்குவோம்" என்று காமராசர் களத்தில் இறங்குவாரானால் அவருடைய நெஞ்சுரத்தைப் பாராட்டலாம்; அதற்குக் காமராசர் தயார்தானா? போராட்டத் தேதியை அறிவிப்பாரா?

—மா. சே.

அழகு நகராக உருவாகும் சென்னை

மாநகராட்சியின் பணிக்கு தில்லான் பாராட்டு

சென்னை, அக். 9—

"சென்னை நகரை அழகிய நகரமாக்குவதற்கு மாநகராட்சி நிர்வாகம் எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டுகிறேன்"

என்று மக்களவைத் தலைவர் ஜி. எஸ். தில்லான் கூறினார்.

சென்னையில் நடைபெற்ற அனைத்து மாநில அவைத் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட நாடாளுமன்ற அவைத் தலைவர் தில்லான் -- மற்ற மாநில அவைத் தலைவர்கள் ஆகியோருக்கு சென்னை மாநகராட்சி சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து தில்லான் பேசுகையில் கூறியதாவது:—

"சில ஆண்டுகளுக்கு முன்பு நான் சென்னைக்கு வந்திருந்தேன்; அதன் பிறகு இப்போது வந்துள்ளேன்.

இந்த இடைக் காலத்தில் சென்னை நகரைத் துப்புரவாக வைத்துக் கொள்வதில் சிறந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது; இப்போது சென்னை நகரம் புத்துருவம் பெற்றுள்ளது.

சென்னையை அழகிய நகரமாக்குவதில் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை நான் பாராட்டுகிறேன்.

இப்போது நமதுநாட்டின் தலைமையமைச்சர் ஒரு பெண் -- சென்னை நகர மேயர் ஒரு பெண் -- விரைவில் நாடாளுமன்றத்திற்கும் அவைத் தலைவராக ஒரு பெண் தேர்ந்தெடுக்கப்படும்நாள் விரைவில் வரும் என்று நம்புகிறேன்."

'உணவுத் தானிய வர்த்தகம்--மாநில அரசே நடத்த அனுமதிக்க வேண்டும்'

டில்லியிடம் தமிழக அரசு கோரிக்கை

தஞ்சாவூர், அக். 10—

"மாநிலங்களுக்கிடையேயான உணவுத் தானிய வர்த்தகத்தில் தரகர்களை அகற்றுவதற்கும் -- உற்பத்தியாளர்களுக்கு உண்மையான பலன்கள் கிடைப்பதற்கும் உதவ நெல் மற்றும் இதர உணவுத் தானிய வர்த்தகத்தை மாநில அரசு மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது"

என்று உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் உபரியாக உள்ள உணவுத் தானியங்களை உணவுக் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்து இதர மாநில அரசுகளுக்கு விற்பனை செய்கிறது; நெல் மற்றும் இதர உணவுத் தானிய வர்த்தகத்தை மாநில அரசு மேற்கொள்வதற்கு மத்திய அரசு அனுமதித்தால் இப்பணியைத் தமிழ்நாடு அரசு புதிதாக அமைத்துள்ள சிவில் வழங்கு துறை மேற்கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

எல்லா இன்றியமையாப் பண்டங்களையும் நியாயமான விலையில் விநியோகிப்பது என்று அரசு தீர்மானித்திருக்கிறது; தொடக்கத்தில் முதல் பிரிவு நகராட்சிப் பகுதிகளில் அவ்வாறு இன்றியமையாப் பண்டங்கள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்; பின்னர், இந்த ஏற்பாடு இதர பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

இன்றியமையாப் பண்டங்களைக் கூட்டுறவுகள் மூலம் வழங்கலாமா அல்லது நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கலாமா என்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது. பருவ காலங்களில் இதர மாநிலங்களிலிருந்து பருப்பு வகைகளை வாங்க அரசு எண்ணியிருக்கிறது."

சர்க்கரை வர்த்தகம்

சர்க்கரை வர்த்தகத்தை உணவுக் கார்ப்பரேஷனிடம் ஒப்படைப்பது என்று மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி அவர் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டில் துவக்கத்திலிருந்தே சர்க்கரை விநியோக ஏற்பாடு மாநில அரசின் மேற்பார்வையில் இருந்துவருகிறது; எனவே, உணவுக்கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்கும் இந்தப் புதிய ஏற்பாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்து தற்போதுள்ள ஏற்பாடே நீடிக்க அனுமதிக்கும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது."

சிறுதொழில் வளர்ச்சி--

"இந்திய அரசு சிறு தொழில் வளர்ச்சிக்கும்--கதர் வளர்ச்சிக்கும் ரூ. 40 கோடி செலவழிக்கப் போகிறது; அதில் கணிசமான பகுதியைத் தமிழ்நாட்டுக்கு கொடுக்கும்படி கேட்டிருக்கிறோம்; அந்தத் தொகையைக் கொண்டு தமிழ்நாட்டில் ஆங்காங்கு கிடைக்கும் மூலப் பொருட்களை வாங்கி கிராமப் பகுதிகளில் சிறு தொழில்கள் தொடங்கப்படும்; இதனால் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பு ஏற்பட்டு வருவாய் உயரும்."

பம்பாயில் அண்ணா பிறந்த நாள் விழா

மாபெரும் ஊர்வலம்---பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு

பம்பாய், அக். 9—

15-10-72 மாலை 3 மணியளவில் (1966-ம் ஆண்டு கழகக் கொடி ஏற்றியமைக்காகத் தளவை இளஞ்சிங்கம் ச. சு. மணி அவர்களைக் காவல் துறையினர் கைது செய்த இடமான) கொலாபா அஞ்சல் நிலையத்திலிருந்து பேரறிஞர் அண்ணாவின் 64-ம் ஆண்டைக் குறிக்கின்ற வகையில் 64 அதிர் வேட்டுக்கள் முழங்க -- 64 மிதி வண்டிகளில் இரு வண்ணக் கொடியுடன் அண்ணா அவர்களின் பொன்மொழிகளைத் தாங்கிய அழகிய படங்களுடன் மிதி வண்டிகள் அணிவகுத்துச் செல்ல -- அதைத் தொடர்ந்து பெங்களூர் முத்துசாமி பொய்க்கால் குதிரை, நவரங் ஆட்டம், நையாண்டி மேளம், கரக ஆட்டம் ஆகியவற்றுடன் அண்ணா அவர்களின் முழு உருவப் படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியைத் தொடர்ந்து இரதம்போல் அலங்கரிக்கப்பட்ட திறந்த மோட்டாரில் இலட்சிய நடிகர் எஸ் எஸ் இராசேந்திரன், முன்னாள் மேயர் சா. கணேசன், 'நம் நாடு' துணை ஆசிரியர் மா. செங்குட்டுவன் ஆகியோர் அமர்ந்துவர -- மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு உடவ்வுஸ் சாலை வழியாகச் சென்று இலட்சுமி சிற்றுண்டி விடுதி கொலாபா சாலை ரீகல் திரைப் பட அரங்கு அருகில் உள்ள மடம் காமாட்சி சாலை வழியாகப் பம்பாயில் முதன் முதற்றாகக் கழகம் தோன்றிய இடமான பேன்ட் ஸ்டான்டு பூங்கா அருகில் உள்ள கேம்பியன் பள்ளி பின்புறமுள்ள வெலிங்டன் பூங்காவை அடையும்.

கொலாபா கிளை முன்னாள் செயலாளர் மறைந்த திரு. ஜெகநாதன் பெயரால் அமைக்கப்பட்டுள்ள அரங்கில், தளவை ச. சு. மணி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

ஊர்வலம் வருகின்ற வழி அனைத்திலும் பல அலங்கார வளைவுகள் -- பல நிற மின்குழல் விளக்குகளால் பெரிய வளைவுகள் அமைக்கின்ற பணிகளில் கழகக் காளையர் ஈடுபட்டுள்ளனர்.

சீத்தா நகர் அறிஞர் அண்ணா நினைவு மன்றத்தின் சார்பில் தொடர் ஓட்டமாக அண்ணா சுடர் கொண்டுவந்து எஸ். எஸ். ஆர். அவர்களிடம் -- பொதுக் கூட்ட மேடையில் கொடுக்கப்படும்.

ஊர்வலத்திலும், அடுத்து நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் பெருவாரியாகக் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கழகத் தோழர்கள் -- ஆதரவாளர்களை கொலாபா தி.மு.க. செயலாளர் ச. சு. மணி கேட்டுக்கொள்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர்

தா. கிருட்டிணன் தாக்கப்பட்டார்

★

சிண்டிகேட் குண்டர்களின் வெறிச் செயல்

மதுரை, அக். 9—

தெற்கு ஆவணி மூலவீதியில் சிண்டிகேட் ஊழியர்கள் ஊர்வலமாக வந்தனர்; அதுபோது அவ் வழியே வந்த மக்களவை தி. மு. கழக உறுப்பினர் தா. கிருட்டிணன் அவர்களின் காரை பலாத்காரமாக நிறுத்தி --கைகளிலிருந்த கழியினால் காரைத் தாக்கினர்.

'ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறீர்கள்?' என்று கேட்ட தா. கிருட்டிணனையும் சிண்டிகேடர்கள் தாக்கியிருக்கின்றனர்.

சிண்டிகேடர்களின் வன்முறையைக் காருக்குள் இருந்த கழகத் தோழர்கள் தடுத்தபோது அவர்களும் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

சிண்டிகேடர்களின் தாக்குதலுக்கு ஆளான தா. கிருட்டிணனுக்கும் -- தோழர்களுக்கும், முதலமைச்சர் கலைஞரும்--- அமைச்சர்களும் ஆறுதல் கூறினர்.

சேதமடைந்த காரையும் அவர்கள் பார்வையிட்டனர்.

ஊழியர்கள் ஊதியம்

திருத்தியமைக்கப்பட்டுள்ள விவரம்

திருச்சி, அக். 10—

ஜூனியர் அசிஸ்டெண்டுகள் -- டைப்பிஸ்டுகள் -- ஸ்டெனோ டைப்பிஸ்டுகள் -- முன்னாள் மாவட்ட போர்டுகளில் ஜூனியர் அசிஸ்டெண்டுகள், டைப்பிஸ்டுகளாக சேவை செய்பவர்கள் -- டெலிபோன் ஆப்பரேட்டர்கள் -- 2-வது கிரேடு கிராம சேவகர்கள், கிராம சேவிகைகள் -- 2-வது கிரேடு நகர பஞ்சாயத்துகள் -- நகரமைப்புகளின் நிர்வாக அதிகாரிகள் ஆகியோரின் சம்பளத்தைக் கடந்த ஆகஸ்டு மாதம் தமிழக அரசாங்கம் திருத்தியமைத்தது; அதன் விவரங்களைப் பற்றிய உத்தரவை செப்டம்பர் 30-ந் தேதியன்று அரசு அறிவித்திருக்கிறது.

மேற்கண்ட அலுவலர்களின் ஊதியம் ரூ. 210—5—245—10—325 என்ற விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத்தின் உத்தரவு கூறுகிறது.

இதுவரையில் அவர்கள் ஊதிய விகிதம் ரூ 200—5—250—10—300 ஆக இருந்தது.

திருத்தப்பட்ட சம்பள விகிதம் 1970 அக்டோபர் 2-ந் தேதியிலிருந்து வந்ததாகக் கருதிச் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படும்; ஆனால் அதனால் வரும் சம்பள உயர்வு 1—9—72-லிருந்துதான் கிடைக்கும்.

அதேபோன்று, ஊதிய உயர்வு பற்றிக் கணக்கிடுவதிலும் 1970-ம் ஆண்டு விதிகளில் திருத்தம் செய்யப்படுகிறது; அதாவது 4 ஆண்டுகள் சர்வீசு வரை -- 2 ஆண்டுகள் (முடிந்த) சர்வீசுக்கு ஒரு சம்பள உயர்வு வீதம் அளிக்கப்படும்; அதற்குமேல் ஒவ்வொரு 3 ஆண்டு சர்வீசுக்கும் ஒரு சம்பள உயர்வு அளிக்கப்படும்; ஆனால் மொத்தத்தில் யாருக்கும் 4 சம்பள உயர்வுகளுக்குமேல் அளிக்கப்படமாட்டாது.

ஜூனியர் அசிஸ்டெண்டுகள் -- டைப்பிஸ்டுகள் -- ஸ்டேனோ டைப்பிஸ்டுகள் ஆகிய பதவிகளில் நியமிக்கப்படும் பட்டதாரிகள் சம்பளம் ரூ. 225-லிருந்து தொடங்கும்.

கிராம அதிகாரிகட்குக் கூடுதலாக ரூ. 7

திருச்சி, அக். 10—

அரசு ஊழியர்களைப் போல் தங்களுக்கும் கிராக்கிப் படியும் -- விதிகளின்படி பயணப் படியும் தர வேண்டும் என்று தமிழ்நாடு நா. கிராம அதிகாரிகள் சங்கம் கோரியிருந்தது.

கிராம அதிகாரிகள் முழு நேர அரசு ஊழியர்கள் அல்லராதலால் முழு நேர அரசு ஊழியர்களுக்குத் தருவதைப்போல் அவர்களுக்குக் கிராக்கிப் படி தரவேண்டியதில்லை என்று அரசு விளக்கியிருக்கிறது.

கிராம அதிகாரிகள் அரசு ஊழியர்கள் அல்லராதலால், பயணப் படி விதிகளின்படி அவர்களுக்குப் பயணப் படியும் தருவதற்கில்லை என்றும் அரசு குறிப்பிட்டிருக்கிறது.

இவைகளுக்குப் பதில் எல்லா கிராம அதிகாரிகளுக்கும் --- ஊழியர்களுக்கும் 1—9—72 முதல் ரூ 7 கூடுதலாகத் தருவதென்று அரசு முடிவு செய்துள்ளது.

குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு தொழில் வரி விலக்கு

கோவை நகராட்சி முடிவு--காட்டூர் கோபால் நன்றி

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அறிவிப்பதாவது:—

"ரூ 300-க்குக் குறைவாக வருமானம் பெறுபவர்கட்குத் தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் -- என்று கோவை மாவட்டப் பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் கோவை நகராட்சி மன்றத்துக்கு முறையீடு செய்திருந்தோம்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் எல்லா நகராட்சிகளிலும் ரூ. 300-க்குக் குறைவாக ஊதியம் பெறுகின்ற ஊழியர்கட்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

கோவை நகராட்சி, தொழில் வரி விலக்கு அளிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

தொழிலாளர்களுக்கு நல்ல பயன் தரும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய நகராட்சித் தலைவருக்கும் -- அதற்கு உறுதுணை புரிந்த உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்."

அரூர் இலக்கிய மன்றம்

கவிதைப் போட்டி முடிவுகள்

அரூர் வட்ட இலக்கிய மன்றம் நடத்திய ஒன்றாவது கவிதைப் போட்டியில் கலந்துகொண்டு 'வள்ளுவன் கண்ட காமம்' என்ற தலைப்பில் கவிதை எழுதிப் பரிசு பெறவர்கள் விவரம் வருமாறு:—

முதற் பரிசு—புலவர் அ. கோபால கிருட்டிணன், வீரபாண்டி; இரண்டாம் பரிசு—பூவை, வாலறிவன், பூலாம்பட்டி; மூன்றாம் பரிசு—புலவர் நா. பசும்பொற்கிழார்.

இந்தப் போட்டிக்கு பேராசிரியர் அப்துல் ரகிமான் நடுவராக இருந்து பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்ந்தெடுத்தார்.

கவிதைப் போட்டியில் கலந்துகொண்ட கவிஞர்களுக்கும், நடுவருக்கும் மன்றத் தலைவர் திரு. தே. வே. சந்தானம் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

மேலை நாடுகளை மிஞ்சும் தமிழகத்தின் ஓவியக்கலை

பேணிவளர்த்திடத் தனி அமைப்பு--கல்வியமைச்சர் நாவலர் யோசனை

'கூட்டுறவு முயற்சிக்கு அரசு ஆதரவு அளிக்கலாம்' என அறிவிப்பு

சென்னை, அக். 9—

"தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், இங்கிருப்பவர்களைப் போன்ற கலைஞர்கள் வேறெங்கும் இலர்; உதாரணமாக, வெளிநாடுகளில் வழவழப்பான பளிங்குக் கற்களில் சிலைகள் அமைக்கும் திறமைசாலிகள் இருக்கின்றனர்; ஆனால், சொரசொரப்பான -- ஒழுங்கில்லாத கருங்கல்லில், சிறு சுத்தி--சிற்றுளிகளைக்கொண்டு அழகிய -- வழவழப்பான சிலைவடிக்கும் சிற்பக் கலைஞர்கள் தமிழ்நாட்டில்தான் உளர்!

"அப்படிப்பட்ட ஓவியக் கலைஞர்களுக்கு உதவிட இந்த அரசு என்றென்றும் தயாராக இருக்கிறது; ஆனால், இந்தக் கலையை வளர்க்க இன்னின்ன வழிவகைகள் -- திட்டங்கள் உண்டு என்று எடுத்துக்கூறித் தூண்டிவிடுவதற்கு எவரும் முன்வராத ஒரு குறைபாடு இருக்கிறது.

"இத்தகைய குறைபாடுகள் நீக்கி, கலையை வளர்க்கப் பணியாற்றுங்கள்; இங்கு சிறந்து விளங்கும் ஓவியர்கள் வரையும் ஓவியங்களை வைக்கச் சென்னையில் ஓர் 'ஓவியக்கூடம்' அமையுங்கள்; அதற்கான இடம் தருவதற்கு முதலமைச்சர் கலைஞருடன் கலந்தாலோசித்து ஆவனசெய்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

"அந்த ஓவியக்கூடத்தில் சிறந்த கலைஞர்களின் ஓவியங்களை வைத்து விற்பனை செய்யலாம்; அதன்மூலம் ஓவியர்கள் நிலை உயரவும் -- புகழ்பெறவும் -- அரசுக்கு உதவிடவும் வகை ஏற்படும்; அதற்கான உதவிகளைச் செய்திட இந்த அரசு முன்வரும் என்று உறுதி கூறுகிறேன்; எனவே, கவின் கலைகளை வளர்த்திடப் பாடுபடுங்கள்"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஓவியர் முன்னேற்றச் சங்க முதலாவது ஆண்டுவிழாவில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

விழாவுக்கு சங்கத் தலைவர் கே. மாதவன் தலைமைவகித்தார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை எஸ். வி. வேலு, சங்கச் செயலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

சங்க ஆண்டறிக்கையை கோவிந்தன் படித்தார்.

விழாவில், திரு. ஏ. எல். சீனிவாசன், கவிஞர் எஸ். டி. சுந்தரம், வேளாண்மைத்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், ஔவை டி. கே. சண்முகம் எம்.எல்.சி. ஆகியோர் பேசினர்.

தோழர் திருநாவுக்கரசு நன்றி கூறினர்.

அமைச்சர் நாவலர்

அமைச்சர் நாவலர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஓவியக் கலையினை வளர்க்கவும்-- அந்தக் கலையைக் கைக்கொண்டுள்ள ஓவியர்களின் நிலையை வளர்க்கவும் இங்க முன்னேற்றச் சங்கம் பாடுபட வேண்டும்.

மற்றக் கலைகளைவிட எளிதாக மக்களைக் கவருகின்ற -- நிலைத்திருக்கக்கூடிய -- அனைத்துப் பகுதியினரையும் பரவலாக ஈர்க்கக்கூடிய - நுணுக்கம் நிறைந்த -- மக்களிடையே அதிகத் தொடர்புள்ள கலை ஓவியக் கலையாகும்.

ஓவியக் கலையில் பல்வேறு வகைகள் இருந்தாலும், மற்ற கலைகளுக்கு அடிப்படைக் கலை இதுதான்; எல்லாத் தொழில்களுடனும் ஓவியக் கலை இணைந்திருக்கிறது.

திரைப் படக் கலை -- படம் போட்டுக் காட்டினால்தான் நன்றாக இருக்கும்; மாதிரி நாடகக் கலை-- மேடையில் நடித்தால்தான் மிளிரும்; ஆனால் ஓவியக் கலை -- பார்த்தாலேயே அனைவரையும் கவரக்கூடியதாகும்.

நாட்டில் உள்ள எல்லா கலைகளையும்விட மக்களுடைய மனதில் எளிதாக--என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய கலை ஓவியக் கலை ஒன்றுதான் அத்தகையச் சிறப்பினைப் பெற்றிருக்கிறது; இக்கலை ஒன்றுதான் பலதரப்பட்ட மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது.

நாகரீகம் வளர—திரைப்படங்கள் வளர—ஒப்பனைக் கலை வளர—தொழில் நிறுவனங்கள் வளர—இவை அனைத்திற்கும் அடிப்படைக் காரணமே ஓவியக் கலைதான்.

அப்படிப்பட்ட கலையை முறைப்படி வளர்த்திட வேண்டும்; அதற்கான வழிவகைகளை இந்தச் சங்கம் ஆராய்ந்து அரசுக்குத் தெரிவித்தால் அதற்கான ஆதரவுகளை நல்கிட இந்த அரசு முன்வரும்.

எந்த ஒரு கட்டடம் கட்டுவதாக இருந்தாலும், முதலில் ஓவியத்தின் வாயிலாக அந்தக் கட்டடத்தின் மாடலை வரையாமல் கட்டடம் கட்டுவது கிடையாது; அதுபோல், இசை நுணுக்கமாகப் பாடப்படுகிறதென்றால்-- அதில் வல்லமை பெற்றவர்கள் தான், அதனுடைய தன்மைகளை ஓரளவுக்குத் தெரிந்துகொண்டு ரசிக்க முடியுமே தவிர, மற்றவர்களால் அதைப் புரிந்து கொள்ள முடியாது.

நாடகக் கலைகூட, மிகச் சிரமப்பட்டு முன்னேற்பாடுகளைச் செய்த பிறகுதான், அதனுடைய பலனை மக்கள் ஓரளவுக்கு நுகர முடியும்.

திருக்குறள் மிகச் சிறந்த இலக்கிய கலைதான்; ஆனால், அது எல்லா மக்களுடைய உள்ளத்தைத் தொடுவது என்பது சற்று கடினம்தான். ஆனால், ஓவியக் கலை ஒன்றுதான் எல்லா மக்களுடைய உள்ளத்தில் தக்க அளவுக்கு மிகச் சிறப்புற்றுத் திகழ்ந்து வருகிறது.

மேலை நாட்டில் கட்டடங்களைக் கட்டும்போது சிற்பக் கலைக்கு என்று ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குகிறார்கள்; அங்குள்ள கட்டடத்திற்குள் நுழையும்போது எதிரிலே சிலை இல்லாமல் இருக்காது; மாடியில் ஏறிச் சென்றாலும் அங்குள்ள சுவரில் ஓவியம் இல்லாமல் இருக்காது.

ஆனால், நம்முடைய நாட்டில் அத்தகைய கலை உணர்வே இல்லாமல் கட்டடங்களைக் கோணல் வடிவத்தில் கட்டிவிட்டு -- இதுதான் 'மாடர்ன் ஆர்ட்' என்று சொல்லுகிறார்கள்; உள்ளபடியே அது கண்ணைக் கவரத்தக்க அளவில் அமைவது கிடையாது. ஓவியக் கலையில் புதிய புதிய நுணுக்கங்களைச் சேர்த்து-- அதில் இன்னும் கவர்ச்சியை வளர்த்து வெற்றி பெற நீங்கள் முயற்சிக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள ஓவியக் கலை ஈடு இணையற்ற வகையில் சிறப்புற்றுத் திகழ்கிறது.

பரத நாட்டியத்தில் எப்படி தமிழகம் சிறப்புற்றுத் திகழ்ந்து வருகிறதோ -- கருங்கற்களில் சிலைகளை வடிப்பதில் எப்படி தமிழகம் தலைசிறந்து விளங்குகிறதோ--அதேபோல், ஓவியக் கலையிலும் தமிழகம் தலைசிறந்து விளங்கப் பாடுபட வேண்டும்; அதற்கான அடிப்படை அறிவு — ஆற்றல் — நம்பிக்கையுண்டு; இதில் ஆக்கமும் ஊக்கமும் நன்கு செலுத்தினால் வேறு எந்த நாட்டு ஓவியர்களையும்விட நம்முடைய ஓவியர்கள் எளிதில் மிஞ்சிவிட முடியும் என்பதில் சந்தேகமில்லை."

ஓவியக் கலையில் மாற்றம்தேவை; அந்த மாற்றம் முன்னதைவிடப் பலன் தருகின்ற மாற்றமாக -- உயர்வை நோக்கிச் செல்கின்ற மாற்றமாக இருக்க வேண்டும்.

'மாடர்ன் ஆர்ட்' என்று பிறருக்கு -- ஏன் வரைந்தவருக்கே புரியாத முறையில் ஓவியம் அமைவது நல்லதா?

நூற்றுக்கு சராசரி வீதம் மக்களைக் கவரக்கூடிய ஓவியம் தான் சிறந்த ஓவியமாகும்.

தமிழகத்தின் ஈடு இணையற்ற கலைப் புகழை மேலும் பரப்பும் விதத்தில் ஓவியக் கலை அமைய வேண்டும்; அதற்குத் தன்னாலான உதவிகளை இந்தக் கழக அரசு செய்யும்.

'கவின் கலைக் கழகம்'

தமிழ்நாட்டில் இந்த மாதிரி கலைகளுக்காக, லலிதகலா அகாடமி' என்ற ஓர் அமைப்பு இருந்தது; அது முறைகேடாக -- ஊழல் நிறைந்ததாக இருந்ததால் கலைக்கப்பட்டது; அதற்குப் பதிலாகத் தற்போது 'கவின் கலைக் கழகம்' என்ற அமைப்பு நிறுவிடத் தமிழக அரசு முயற்சி செய்து வருகிறது.

இந்த ஓவியக் கலை வளர்ந்திட இந்தச சங்கத்தினர் ஒற்றுமையோடு ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்திட வேண்டும்; அதனை அமைத்தால், கூட்டுறவுத்துறை மூலம் நீங்கள் அமைக்க இருக்கும் கூட்டுறவுச் சங்கத்துக்கு உதவிட -- அதனால் ஓவியர்கள் பயன்பெறத்தக்க விதத்தில் அரசு உதவிட ஏதுவாகும்.

எனவே, நீங்கள் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து இந்தக் கலையின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்; கூட்டுறவுச் சங்கம் அமைப்பதால் வெளிநாடுகளுடன் போட்டியோடும் அளவில் நாம் முன்னேற முடியும்."

புரட்சிநடிகர்எம்.ஜி.ஆர்.மீது ஒழுங்கு நடவடிக்கை

26 செயற்குழு உறுப்பினர்கள் விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை

சென்னை, அக். 10—

திரு. எம். ஜி. ஆர். அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கோரி கழகத் தலைவர் — பொதுச்செயலாளர் ஆகியோரிடம் 26 தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்த விண்ணப்பம் வருமாறு:—

"இதில் கையொப்பம் செய்திருக்கும் தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர்களாகிய நாங்கள் பணிவன்போடு அளிக்கும் விண்ணப்பம்:—

"அண்மையில் சில நாட்களாகக் கழகப் பொருளாளர் திரு. எம். ஜி. ஆர்., கழக சட்டதிட்டத்திற்கு மாறாக கழக அரசையும், சட்டமன்ற — நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மாவட்ட — வட்ட — கிளைக் கழகச் செயலாளர்களையும் குற்றஞ்சாட்டும் முறையில் கழகத்தையே இழிவுபடுத்திப் பேசி வருகிறார்; கழகச் செயற்குழுவிலும் — பொதுக்குழுவிலும் மட்டுமே பேசக்கூடியதும் மறுக்கப்படக்கூடியதுமான பிரச்சினைகளைப் பொதுமேடையில் பேசிப் பொதுமக்களிடையே குழப்பம் விளைவித்து வருகிறார்.

"மேலும், கோவையில் நடைபெற்ற பொதுக்குழுவில் மதுவிலக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசி — அந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றுவதற்கு ஒத்துழைத்திருந்தும் இப்போது அந்தப் பிரச்சினையை எதிர்த்தும் பேசி வருகிறார்.

"மேலும், கழகப் பொதுக்குழுவிலும் — செயற்குழுவிலும் அவர் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதாகவும், அந்தத் தீர்மானத்தைப் பொதுக்குழு ஏற்றுக்கொள்ளாவிட்டால், 'நான் பொதுமக்கள் முன்னால் சென்று பிரச்னையை எடுத்துவைத்துக் கழகத்தைச் சந்திப்பேன்' என்றும் பேசியிருக்கிறார்.

"அவருடைய இந்தப் போக்குக் கழக அமைப்பையும் — பொதுக்குழுவையும் — நமது சனநாயக முறையையும் இழிவுபடுத்துவதாக உள்ளது.

"ஆகவே, கழகக் கட்டுப்பாட்டைக் காப்பாற்றவும் — விதிமுறைகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் அவர்மீது உடனடியாகத் தக்க நடவடிக்கையை எடுக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்."

விண்ணப்ப மனுவில் கையெழுத்திட்டுள்ளவர்கள் வருமாறு:—

1. கே. டி. எஸ். மணி, செங்கற்பட்டு.
2. நீலநாராயணன், சென்னை.
3. எஸ். ஏ. இராசமாணிக்கம், கோவை.
4. எம். செல்வராசு, தென்னாற்காடு.
5. எச். எல். முருகேசன், தர்மபுரி.
6. தோப்பூர் திருவேங்கடம், வட ஆற்காடு.
7. எஸ். எஸ். தென்னரசு, இராமநாதபுரம்.
8. அழகியநம்பி, நெல்லை.
9. எஸ். முத்து, மதுரை.
10. எம். எஸ். வெங்கடாசலம், திருச்சி.
11. ஈ. ஆர். கிருஷ்ணன், சேலம்.
12. இரா. இராசன், தஞ்சை.
13. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
14. சத்தியவாணிமுத்து.
15. ப. உ. சண்முகம்.
16. என். வி. நடராசன்.
17. க. அன்பழகன்.
18. அன்பில் தர்மலிங்கம்.
19. மன்னை நாராயணசாமி.
20. எம். ஓ. எச். பாரூக்.
21. ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
22. து. ப. அழகுமுத்து.
23. க. இராசாராம்.
24. காஞ்சி கல்யாணசுந்தரம்.
25. சி. வி. எம். அண்ணாமலை.
26. டி. கே. சீனிவாசன்.

கழகத் தலைவர் — பொதுச்செயலாளர் — பொருளாளர் உட்பட மொத்தம் 31 பேர் செயற்குழு உறுப்பினர்களாவர்; இதில், தலைவர் — பொதுச்செயலாளர் — பொருளாளர் தவிர 26 பேர் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

தலைமைக் கழக முடிவு

இந்த மனுவைக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களும் — பொதுச்செயலாளர் நாவலர் அவர்களும் பரிசீலனை செய்து எடுத்த முடிவு பற்றிய அறிக்கையைத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் செய்தியாளர்களிடம் படித்தார்; அதில் அவர் கூறியிருப்பதாவது:—

"தலைமைக் கழகப் பொருளாளர் எம். ஜி. ஆர். அவர்கள், அண்மைக்காலத்தில் கழகக் கட்டுப்பாட்டினை மீறியும் — கழகத்திற்குக் களங்கம் ஏற்படும் வகையிலும் தொடர்ந்து தன்னுடைய நடவடிக்கைகள் மூலம் செயல்பட்டு வருவதால், அவர் இன்றுமுதல் கழகப் பொருளாளர் பொறுப்பிலிருந்தும் மற்றும் கழகத்தின் சாதாரண உறுப்பினர் உள்பட எல்லாம் பொறுப்புகளிலிருந்தும் தற்காலிகமாக விலக்கிவைக்கப்பட்டிருக்கிறார்; அவர்மேல் விரைவில் முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

என்.வி.என். விளக்கம்

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கூறியதாவது:—

"இதுபற்றி உடனே அவருக்குத் தகவல் தெரிவிக்கப்படும்; அவரிடம் விளக்கம் கேட்டு நோட்டீசு அனுப்பப்படும்; அவரிடமிருந்து பதில் வந்ததும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்."

கேள்வி:— "இப்படிப்பட்ட நடவடிக்கை எம். ஜி. ஆர் மீது மட்டும்தான் எடுக்கப்படுமா? வேறு யார்மீதும் எடுக்கப்படுமா?"

என். வி. நடராசன்:—"இப்போது எம். ஜி. ஆர்.மீது மட்டும்தான் புகார் கூறி மனு கொடுத்திருக்கிறார்கள்; ஆகவே அவர் மீது மட்டும்தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது."

நடக்க இருப்பவை

அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள்

12--10--72

தெள்ளேரி அகரம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: என். ஆர். முனிரத்தினம்; பேசுவோர்: டி. சீனுவாசன், ஆர். கோபாலன், வெ. கன்னியப்பன், வை. வீரபத்திரன், எம். ஏகப்பன், எம். அய்யனாரப்பன் மற்றும் பலர். (இரவு 10 மணிக்கு புஞ்சரசன் தாங்கள் என். ஜி. தேவன் குழுவினரின் சீர்திருத்த நாடகம் — எம். திருவேங்கிடம் தலைமையில் — சி. தா. முனுசாமி முன்னிலையில் நடைபெறும்)

பச்சையப்பன் அறநிலைய ஆண்டு விழா

சென்னை பச்சையப்பர் அறநிலையத்தின் 129-வது ஆண்டு விழா, 12—10—72 மாலை 6 மணிக்கு சேத்துப்பட்டு பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்; ஆளுநர் திரு. கே.கே. ஷா தலைமை வகிப்பார்; பச்சையப்பன் அறநிலைய அறங்காவலர் குழு உறுப்பினர் திரு முரசொலி மாறன் எம்.பி. சொற்பொழிவாற்றுவார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறை அமைச்சர் எஸ் இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இப்போது எம்.எல் ஏ-க்கள் — எம் எல்.சி.-க்களுக்கு இலவசப் பாஸ்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

பம்பாயில் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

14--10--72

பம்பாய் மாதுங்கா

லேபர் கேம்ப் பேரறிஞர் அண்ணா குறள் வளர்ச்சி மன்றத்தின் சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: நெல்லை சோமசுந்தரம்; வரவேற்பு: பெ. வேலாயுதம்; சிறப்புரை: இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் எம்.பி.; மலர் வெளியிடுபவர்: 'நம் நாடு' துணையாசிரியர் மா. செங்குட்டுவன்; அண்ணா படத் திறப்பாளர்: முன்னாள் மேயர் சா. கணேசன்; முதல் மலரைப் பெறுபவர்: எஸ். இராமானுசம்; பேசுவோர்: களந்தை வேலன், இரா. இராசு, நெல்லைச் செழியன், சி. லூயிஸ் இராயன், பா. முத்துக்கிருட்டினன், எஸ். தியாகராசன், தொ. து. அன்புச்செழியன், அ. இராயப்பன், சு. வள்ளிநாயகம், செ. முருகையா, நெல்லை வளவன், வை. சுப்பிரமணியம்.

பம்பாய் ஓர்லி

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 8 மணிக்கு பெங்கால் கெமிகல் அருகில்; வரவேற்பு: கே. பெத்தன்; தலைவர்: கே. சஞ்சுவன்; அண்ணா படத் திறப்பு; இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி., பேசுவோர்: மா. செங்குட்டுவன், கா. கணேசன், எஸ். தியாகராசன், எல். என். செழியன், சு. வள்ளிநாயகம், செ. இளங்கோவன், என். ஞாமத்துல்லா, கோ. வள்ளுவன். (காலை 8.30 மணிக்கு மன்றப் பணிமனையில் சி. இராசு தலைமையில் தி. மு. கழகக் கொடியேற்றுவார்; க. மூ. ஆரியசங்காரன் உணவு வழங்குவார்; பேசுவோர்: பி.எஸ். கலைச் செல்வன், ஏ. எல். பெருமாள்.)

15--10--72

மாதுங்கா

பேரறிஞர் அண்ணா குறள் வளர்ச்சி மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: கோ. வள்ளுவன்; வரவேற்பு: கா. பழனி; பேசுவோர்: இலட்சிய நடிகர் எஸ் எஸ். இராசேந்திரன் எம்.பி., மா. செங்குட்டுவன், சா. கணேசன் மற்றும் பலர். (14—10—72 மாலை 4-30 மணிக்கு சயான் மின் தொடர்வண்டி நிலையத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு பாலகிலலா — தாராவி கணேசர் ஆலயம் — குமர்வாடா வழியாக லேபர் கேம்ப் திடலை அடையும்.)

எம். ஜி. ஆர். மீதான குற்றச்சாட்டு

விளக்கம் கேட்டுப் பொதுச்செயலாளர் நாவலர் கடிதம்

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கிவைக்கப்பட்டுள்ள திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம், உரிய குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கம் கேட்கும் வகையில் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் நகல் விவரம் வருமாறு:—

சென்னை, அக். 10—

"கழகத்தின் முன்னணித் தோழர்களில் ஒருவராகவும், 'கழகப் பொருளாளர்' என்ற பொறுப்பிலும் உள்ள தாங்கள் அண்மைக்காலமாகக் கழகக் கட்டுப்பாடு — ஒழுங்குமுறைகளை மீறியும், கழகத் தோழர்களிடையே பிளவுகளை உருவாக்கும் முறையிலும் — கழகத்தின் கண்ணியத்துக்குப் பொதுமக்களிடையே இழுக்கு ஏற்படும் வகையிலும் — கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையிலும் தாங்கள் செயல்படுவதும் — பேசிவருவதும் கழகத்தின் பல்வேறு பொறுப்பிலுள்ள தோழர்களால் தலைமைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

"கழகத் தலைமைச் செயற்குழு—பொதுக்குழுக் கூட்டங்களில் முறைப்படிப் பேசி விவாதிக்க வேண்டிய கருத்துக்களைத் தாங்கள் வெளிப்படையாகப் பேசுவதுடன் — அவை — கழகத்திற்கு எதிரானதும் ஊறுசெய்யக் கூடியதுமான வகையில் இதழ்களில் வெளிவரும் நிலைமைகளையும் உருவாக்கி வருகிறீர்கள்; எல்லா இதழ்களிலும் பரவலாக நாள்தோறும் வெளியிடப்படும் தங்கள் முறைகேடான பேச்சுக்கள் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பது, தலைமைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

மதுவிலக்குக் கொள்கை பற்றிக் கோவையில் நடைபெற்ற தி.மு. கழகப் பொதுக்குழு ஒருமனதான ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது; இதனைத் தாங்களும் உடனிருந்து நிறைவேற்றியிருப்பதுடன், அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாகத் தாங்கள் விளக்கமாகப் பொதுக்குழுவில் பேசியும் இருக்கிறீர்கள்.

இந்தத் தீர்மானத்தின் பேரில் கழகமும் — கழக அரசும் மேற்கொண்ட செயல்முறைகளைத் தாங்கள் இத்தனை நாள் கழித்து பகிரங்கமாகக் கண்டித்துப் பேசியிருக்கிறீர்கள்; இது, கழகக் கட்டுப்பாட்டையும், பொதுக்குழுவின் முடிவின் பேரில் கழகமும் — கழக அரசும் மேற்கொண்ட செயல்முறைகளை அவதூறாகப் பேசுவதாகவும் அமைவதாகத் தலைமைக் கழகம் கருதுகிறது.

மேலும், 8—10—72 அன்று சென்னை ஆயிரம்விளக்குப் பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில், கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் தாங்கள் ஓர் தீர்மானம் தாக்கல் செய்யப் போவதாகவும், அந்தத் தீர்மானம் பொதுக்குழுவில் நிறைவேறாமல் போகுமானால் அந்தத் தீர்மானத்தைப் பொதுமக்கள் முன்னிலையில் வைத்து மூலைக்கு மூலை பிரசாரம் செய்து வெளியில் ஆதரவு திரட்டப் போவதாகவும் பேசியிருக்கிறீர்கள்.

பொதுக்குழுவில் எந்த ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கும் அதன் உறுப்பினரான யாருக்கும் முழு உரிமை உண்டு; ஆனால், அப்படிக் கொண்டுவரும் தீர்மானம் நிறைவேறாமற் போகுமானால் பொதுக்குழுவின் முடிவுக்குக் கட்டுப்படவோ அடங்கவோ மறுத்து அதே தீர்மானத்தைப் பொதுமக்களிடையில் — அதாவது கழகத்துக்கு வெளியே வலியுறுத்துவேன் — ஆதரவு தேடுவேன் என்று பகிரங்கமாகத் தங்களைப் போன்ற முக்கியப் பொறுப்பில் உள்ள தோழர் அறிவிப்பது கழகக் கட்டுப்பாடு — ஒழுங்குமுறை — கழகம் வளர்க்க விரும்பும் சனநாயக அடிப்படை ஆகியவைகளைப் புறக்கணிக்கத் துணிந்துவிட்ட செயலாகவே கருத வேண்டியிருக்கிறது.

மேலும், இவைபோன்று அடிக்கடித் தங்களால் கழக நன்மைகளுக்கு எதிராகப் பகிரங்கமாகப் பேசப்பட்டுவரும் கருத்துக்கள், கழகத் தோழர்களிடையில் கட்டுப்பாடு இன்மையும், பொதுமக்களிடையில் கழகத்தைப் பற்றி தவறான இழிவான எண்ணமும் உருவாக ஏதுவாகிறது என்று தலைமைக் கழகம் கருதுகிறது.

எனவே, இவைபோன்ற காரணங்களாலும் கழகத் தோழர்களிடையே குழப்பமும், பொதுமக்களிடையே கழகத்திற்கு இழுக்கும் நேரிடுவதைத் தடுக்கும் வகையில் தங்களை அன்று முதல கழகப் பொருளாளர் பொறுப்பு மற்றும் சாதாரண உறுப்பினர்ப் பொறுப்பு உட்படக் கழகத்தின் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்டு) வைப்பதுடன், மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே தங்களை ஏன் அறவே கழகத்திலிருந்து நீக்கக்கூடாது என்பதற்கும் இந்தக் கடிதம் கிடைத்த 15 (பதினைந்து) நாட்களுக்குள் தலைமைக் கழகத்திற்குத் தாங்கள் தெரிவிக்க விரும்பும் விளக்க—சமாதானங்களைத் தெரிவிக்குமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்."

(ஒ-ம்) இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க. சென்னை;
10—10—72

தீண்டாமைஒழிப்பு—தலைமையமைச்சர் காட்டும் தீவிரம்

காந்தி நகர், அக். 11—

"தீண்டாமை கடைபிடிப்பவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி நேற்று அங்கு வற்புறுத்தினார்.

அ. இ. கா. குழுவின் அரிசனப் பிரிவினரிடை பேசுகையில் அவர், தாம் தீண்டாமை கடைபிடிக்கப்படுவது குறித்துப் பல நிகழ்ச்சிகள் கேள்வியுற்றதாகத் தெரிவித்தார்.

"சில அரசு அலுவலகங்களில் அரிசனங்கள் எடுத்துக் குடிக்கும் பாத்திரத்திலிருந்து மற்றையோர் தண்ணீர் குடிக்க மறுத்துவருவதாகக்கூடக் கேள்விப்பட்டேன்" என்றும் அவர் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] 'நம் நாடு' [illegible] இட்டு வெளியிடப்படுகிறது.